DINAMALAR

19 FEB 2022

PAGE 2

# தொலைதூர கல்வி இயக்கக தொடர் சொற்பொழிவு

**புதுச்சேரி, பிப். 19–**

புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்கத்தில் உள்ள பட்ட படிப்புகளை நாடு முழுவதும் இருந்து மாணவர்கள் படிக்கின்றனர். இம்மாணவர்களுக்கு வழிகாட்ட வெபினார் மூலம் சர்வதேச இணைய வழி தொடர் சொற்பொழிவினை பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்ககம் முடிவு செய்துள்ளது.

இதற்கான துவக்க விழா நேற்று காணொலி வாயிலாக நடந்தது. புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்கக இயக்குனர் ராமய்யா வரவேற்றார்.

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங் இணைய வழி சர்வதேச தொடர் சொற்பொழிவினை துவக்கி வைத்து பேசுகையில், 'கொரோனா தொற்று பரவல் உள்ள சூழ்நிலையில், பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்ககம் டிஜிட்டல் வடிவிலான சொற்பொழிவினை ஆரம்பித்துள்ளது நல்ல முயற்சி என' பாராட்டினார்.

ஆஸ்திரேலியா அறிவியல் அகாடமி தலைவர் சேனுபதி ஜெகதீஷ் சிறப்புரையாற்றினார். முதற்கட்டமாக அடுத்த மூன்று மாதத்திற்கு இணைய வழி சொற்பொழிவு நடத்தப்பட உள்ளது. அதில் மாணவர்களின் திறன் முன்னேற்றம், தலைமையத்துவம் உள்பட பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவு நடக்க உள்ளது.